4. கவன ஈர்ப்பு.

(அ) லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப்போவதால் ஏற்படும் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. முதலில், திருவாளர்கள் கே. அர்சுனன், எஸ்.டி. உகம் சந்த், குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அந்த உறுப்பினர்கள் யாரும் இல்லாததால், அமைச்சர் அவர்கள் அறிக்கையை அவைக்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

அறிக்கை

டீசல் பெட்ரோல் மற்றும் டயர் போன்றவைகளின் விலையை நிர்ணயம் செய்வது மைய அரசு சம்பந்தப்பட்ட தாகும். சமீபத்தில் மைய அரசில் வரவு செலவு திட்ட அறிக்கையில், மேற்காணும் பொருட்களுக்கு மைய அரசு கூடுதல் விலை நிர்ணயம் செய்துள்ளது; எல்.பி.ஜி. கேஸ் பாரத்தை ஏற்றிச் சென்று விநியோகிக்கும் லாரிகளுக்கு கூடுதல் வாடகைக்கான கோரிக்கை. பரிசீலிக்க வேண்டியது மைய அரசின்கீழ் இயங்கும் எண்ணெய்க்கழகங்களைச் சார்ந்ததாகும். இது சம்பந்தமாக மைய அரசும் மற்றும் அதன் எண்ணெய் கழகங்களும் தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (Oil Corporations)

10-55 மணி

(ஆ) குத்தாலம், நரிமணம் பகுதிகளிலிருந்து சென்னைக்குக் கனரக வண்டிகளை எண்ணெய், இயற்கை எரிவாயு நிறுவனம் அனுப்புவதால் சாலைகள் பழுதுபடுவது குறித்தும் அந்நிறுவனம் நெடுஞ்சாலைத் துறைக்குத் தொகை கொடுக்காதது குறித்தும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கீழ்த் தஞ்சை மாவட்டம் குத்தாலம் நரிமணம் பகுதிகளில் இருந்து எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் சென்னைக்கு கனரக வண்டிகளை அனுப்புவதால் சாலைகள் பழுதுபட்டு வருவதால் அந்நிறுவனத்திடமிருந்து

1990 ஏப்ரல் 18]

நெடுஞ்சாலைத் துறையினர் கேட்ட தொகை பெறப்படாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,

அறிக்கை

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் எண்ணெய் எரிவாயு நிறுவனம் அமைந்துள்ளது.

(1) நாகூர்-வெட்டாறு சாலையில் (நரிமணம் கிராமத்தில்)

(2) கலப்பை கிராமம் திருத்துறைப்பூண்டி பரவத் கோட்டை சாலையில்.

(3) கமலாபுரம் கிராமம் மன்னார்குடி துறையூர் சாலையில்.

(4) வேதாரண்யத்தில், மேற்கண்ட இடங்களில் எண்ணெய் எடுக்கப்பட்டு சென்னைக்கு கனரக வாகனங்களும் எண்ணற்ற டாங்கர்களும் செல்வதால் கீழ்க்கண்ட சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவைகள் சீர்செய்து மேம்பாடு செய்வதற்கு தேவையான தொகையும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

	மதிப்பீட்டு தொகை.	
	கி.மீ.	(ரூ. லட்சத்தில்).
1. திருத்துறைபூண்டி-பரவக்கோட்டை சாலை கி.மீ. 2/4-13/4	11.00	220.00
2. மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி சாலை கி.மீ. 28/0-29/0	1.00	20.00
3, மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை கி.மீ. 0/4-68/0	67.60	1,400.00
4. கும்பகோணம்-சீர்காழி சாலை கி.மீ. 30/6-68/4	3[illegible].80	700.00
5. நாகூர்-வெட்டாறு சாலை கி.மீ. 0/0-22/6	22.60	450.00
6. நாகூர்-நன்னிலம் நாச்சியார் கோவில் சாலை கி.மீ. 0/0-24/0	24.00	480.00

	கி.மீ	மதிப்பீட்டுத் தொகை. (ரூ. லட்சத்தில்)
7. நாகூர்–காரைக்கால் சாலை கி.மீ. 7/2–8/2	1.00	20.00
8. தரங்கம்பாடி–காரைக்கால் சாலை கி.மீ. 0/0–3/4	3.40	70.00
9. துரங்கம்பாடி–மயிலாடுதுறை சாலை கி.மீ. 0/0–29/6	29.60	600,00
10. ஆக்கூர்–சீர்காழி சாலை கி.மீ. 11/0–28/0	17.00	340.00
11. மன்னார்குடி–திருவாரூர் சாலை கி.மீ. 1/6–26/2	24.60	500.00
12. நாகப்பட்டினம்–கூடலூர் மைசூர் சாலை கி.மீ. 0/0–60/0	60.00	1,200.00
	295.60 (அல்லது) 300 கி.மீ.	6,000.00 (அல்லது) 60 கோடி

மேற்கண்ட சாலைகளை சீர் செய்து மேம்பாடு செய்வதற்கு ரூ.60.00 கோடி செலவை நில எரிவாயு நிறுவனத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. இது பற்றி அந்நிறுவனத் திடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சாலைகள் விடப்பட்டு இருக்கின்றன. அதற்கு காரணம் அடிக்கடி எரிவாயுவைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து கிணறுகள் கண்டுபிடித்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தால் சில பகுதிகள் விடப்பட்டு இருக்கின்றன. விடுப் பட்ட சாலைகளில் கூட திருவாரூர் குடந்தை சாலை கூட அந்தப் பகுதியில் விடப்பட்டு இருக்கிறது. அந்த சாலையையும் இதிலே சேர்த்து இந்த 60 கோடி ரூபாயைக் கேட்டு இருப்பதை உடனடியாக பெற்று அந்த சாலையை சீர் செய்யாவிட்டால் வரும் மழைக்காலத்தில் எந்த வண்டியும் அந்த சாலையில் செல்ல முடியாத அளவுக்கு சாலைகள் சீர்கெட்டுள்ளன. எனவே மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை கொண்டு அந்தப் பணத்தை உடனடியாக ஓ.என்.ஜி.சி. மூலம் பெற்று இந்த சாலைகளை சீர் செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 12 சாலைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வண்ணம் பாழடைந்து இருக்கிறது. அவைகளை சீர் செய்வதற்கு 60 கோடி ரூபாயை நாம் அந்த நிறுவனத்திடமிருந்து கேட்டு இருக்கிறோம். அதேநேரத்தில் தென் ஆற்காடு மாவட்டத்திலும் 13 சாலைகள் பாழடைந்து இருக்கிறது. அதற்கும் 18 கோடி ரூபாய் நாம் கேட்டு இருக்கிறோம். ஆக மொத்தம் 78 கோடி ரூபாயை நாம் அந்த நில எரிவாயு நிறுவனத்திடமிருந்து கேட்டு இருக்கிறோம். சாலைகளை செப்பனிடுவதற்காக. அது குறித்து 7-3-1990-ல் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். இன்னும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பதிலில் கூட நான் சொன்ன திருவாரூர்-குடவாசல்-கும்பகோணம் சாலை இல்லை. அந்த சாலையில் இப்போது தான் கண்டுபிடித்து இருக்கிறார்கள். எனவே அந்த சாலையையும் இதிலே சேர்த்து பல மாதமாக ஆகியும் எந்த விதமான பதிலும் அந்தத் துறையிலிருந்து வரவில்லை என்ற காரணத்தால் வேகமாக விரைந்து நாம் பணம் பெறுகின்ற வழியில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு விரைவில் பணத்தைப் பெற்று அந்த சாலைகளை சீர் செய்ய முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்வருவோம்.

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள் 1990-91— விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 24 தொழில்கள்—(தொடர்ச்சி)

(ஆ) கோரிக்கை எண் 51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—(தொடர்ச்சி)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்டு இருக்கின்ற இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.